**வரக்காப்பொல பிரதேச சபை**
**கேகாலை மாவட்டம்**

-----------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 யூலை 31 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வராக்காப்பொல பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் கடன்கொடுத்தோர் ரூபா 35,293 தொகை குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய சம்பள மீளளிப்பு ரூபா 4,090,049 ஆக இருந்த போதிலும், அது ரூபா 8,209,974 ஆகக் கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக சம்பள மீளளிப்பு ரூபா 4,119,925 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 22 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 108,383,460 ஆக இருந்த போதிலும், அதற்குரிய உபயோகப் பதிவேடுகள் / அறிக்கைகளின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 93,342,013 ஆனமையால் ரூபா 1,504,144 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) நிலையான சொத்துக் கணக்கு மீதி ரூபா 164,687,362 ஆக இருந்த போதிலும், மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்பு கணக்கின் மீதி ரூபா 125,004,008 ஆனமையால் ரூபா 39,683,354 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

(இ) உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியக் கணக்கின் மீதி ரூபா 9,525,086 ஆக இருந்த போதிலும், அதற்குரிய பட்டோலைகளின் பிரகாரம் மீதி ரூபா 15,526,685 ஆனமையால் ரூபா 6,001,599 வேறுபாடு காணப்பட்டது.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### (அ) பெறவேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்ன் இறுதியில் 01 வருடத்தை விஞ்சிய பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 28,458,790 ஆகும்.

#### (ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் 01 வருடத்தை விஞ்சிய செலுத்த வேண்டிய கடன்கொடுத்தோர் மீதிகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 19,786,415 ஆகும்.

## 1.4 இனங்காமைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| (i) நிதிப்பிரமாணம் 189 | 15,346 | மதிப்பிழந்த 04 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 396(ஈ) | 18,591 | வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத 10 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருததி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 67 மற்றும் 68 ஆம் பிரிவுகள் | - | சபையினால் வழங்கப்பட்ட அபிவிருத்தி அனுமதிப்பத்திரத்தின் 02 ஆம் பிரிவின் பிரகாரம் நிர்மாணிக்கப்பட்ட புதிய கட்டிடத்திற்காக தரச்சான்றிதழ் பெறப்படாமல் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாதிருந்த போதிலும், தெரிவுக் களப் பரிசோதனையின் பிரகாரம் 07 கட்டிடங்கள் தரச்சான்றிதழ் பெறாமல் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 33,905,666 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 23,527,420 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 8,160,000 | 8,160,000 | 7,399,111 | 760,888 | 7,638,000 | 7,638,000 | 6,834,879 | 803,120 |
| வாடகை | 7,527,000 | 7,527,000 | 5,694,064 | 1,832,935 | 7,354,000 | 7,354,000 | 6,569,752 | 784,247 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,420,200 | 1,420,200 | 1,388,938 | 31,262 | 1,520,300 | 1,520,300 | 1,527,293 | (6,993) |
| ஏனைய வருமானம் | 86,479,500 | 86,479,500 | 52,097,784 | 34,381,715 | 78,073,700 | 78,073,700 | 51,954,268 | 26,119,431 |

#### 2.2.2 வீதவரியும் வரியும்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 05 வருடங்களுக்கு ஒரு தடவை ஆதனங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு வரித்தொகை அறவிடப்பட வேண்டிய போதிலும், 2008 ஆம் ஆண்டின் பின்னர் ஆதனவரி ஆதனங்கள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிரதேச சபை எல்லையில் புதிய அபிவிருத்தியடைந்த பிரதேசங்களை இனங்கண்டு ஆரம்ப மதிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 1988 இன் பிரதேச சபைகள் நிதி, நிர்வாக விதி 33 இன் பிரகாரம் கொடுப்பனவுகளைச் செலுத்தாது புறக்கணித்த நபர்கள் தொடர்பாக பட்டியலொன்றும், ஆதனங்களைத் தடை செய்யும் பிடியாணையும் ஒவ்வொரு காலாண்டு இறுதியிலும் தயாரிக்கப்பட்டு நடுக்கட்டல் உத்தியோகத்தர்களுக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள்

அதிகாரச்சட்டத்தின் 158(1) உப பிரிவின் பிரகாரம் ஆதனங்கள் தடை செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

சபை அதிகாரப் பிரதேசத்தில் நடாத்திச் செல்லப்படுகின்ற சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற வேண்டிய 09 வியாபார நிறுவனங்கள் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக ரூபா 36,000 வருமானத்தை சபை இழந்திருந்தது.

**2.2.4 ஏனைய வருமானம்**

**(அ) சுற்றுலா ஹோட்டல் கட்டணம்**

சபை அதிகாரப் பிரதேசத்திற்குரிய சுற்றுலாச் சபையில் அங்கீகரிக்கப்பட்ட ஹோட்டல்கள் தொடர்பான மெய்மையாய்வை மேற்கொண்டு கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) அறிவித்தல் பதாதைக் கட்டணம்**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126(vii)ஊ மற்றும் 126(xxx) மற்றும் 1988 ஆகஸ்ட் 25 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியின் பிரகாரம் அறிவித்தல் பதாதைக் கட்டணமாக ரூபா 199,230 தொகை அறவிடப்பட்டிருந்த போதிலும், முறையான பிரகாரம் உபவிதிகளை விதித்து வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) களியாட்ட வரி**

இரண்டு சினிமா திரையரங்குகளிலிருந்து 2014 ஆம் ஆண்டு முதல் கிடைக்க வேண்டிய ரூபா 179,089 தொகையான களியாட்ட வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**(ஈ) வாகனத் தரிப்பிடக் கட்டணம்**

வாகன தரிப்பிடக் கட்டணம் அறிவிடுவதற்காக உப விதி விதித்திருந்த போதிலும், மீளாய்வாண்டில் வருமானத்தை அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) காணிகளைக் கூறிட்டு விற்பனை செய்தல்**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 154 ஆம் பிரிவின் பிரகாரம் கலட்டியகொட கொஸ்கஹமுலஹேன காணியைக் கூறிட்டு விற்பனை செய்யும் அடிப்படையில் சபைக்கு அறவிட வேண்டிய 1 சதவீத கட்டணமான ரூபா 40,000 இனை அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 9,999,633 மற்றும் முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 36,902,401 ஆகக் காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

#### (அ) எதிர்பார்த்த பூர்த்தி மட்டத்தை அடைதல்

(i) 2017 ஆம் ஆண்டின் பாதீட்டின் மூலம் மூலதனச் சொத்துக்களை கைப்பற்றுவதற்காக 24 செயற்திட்டங்களின் கீழ் ரூபா 10,564,000 மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அதில் ரூபா 3,850,000 பெறுமதியான 14 செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ii) 2016 ஆம் ஆண்டில் 03 நிதி மூலங்களின் கீழ் 54 வேலைகளுக்காக ரூபா 12,109,098 தொகையான நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், 2018 எப்ரல் வரையிலும் அந்த வேலைகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்

தெலிஎல்ல கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையத்திற்கு முறையற்ற வகையில் கழிவுப்பொருட்கள் போடப்பட்டமையால் பொதுமக்களின் எதிர்ப்புக்கு உள்ளாகி இருந்தது.

#### (இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான 2030 ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகளின் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை தெளிவுபடுத்தாமையின் காரணமாக அந்த நோக்கங்களுக்காக உலகளாவிய குறிகாட்டிகளின் மூலம் சபை அதிகாரப்பிரதேசத்தில் பொதுமக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதாரம் என்பவற்றைக் கட்டியெழுப்புவதற்கான நீண்ட காலத்திட்டம் என்பன 2018 மே வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

காசாளருக்கு கிடைப்பது தொடர்பாக நாளாந்த குறிப்புப் புத்தகம் நாளாந்தம் காசாளரினால் சமப்படுத்தப்படாதிருந்ததுடன் நாளாந்த காசு மீதி மற்றும் புத்தக மீதி என்பன நாளாந்தம் மேற்பார்வை உத்தியோகத்தர் ஒருவரினால் 1988 இன் பிரதேச சபைகள் (நிதி, நிர்வாகம்) விதி 164 இன் பிரகாரம் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் மேலதிக ஊழியர் எண்ணிக்கை 20 ஆக இருந்ததுடன் அதற்கு மேலதிகமாக ஊழிய அடிப்படை மற்றும் அமைய அடிப்படையில் சேர்க்கப்பட்ட 29 ஊழியர்களும் இருந்தனர். 180 நாட்கள் பூர்த்தி செய்யும் போது நிரந்தரமாக்குவதற்காக வெற்றிடங்கள் காணப்படாது இருந்ததுடன் ஆட்சேர்ப்பில் ஆகக் குறைந்த தகைமைகளை பூர்த்தி

செய்யாத 14 ஊழியர்களின் உடன்படிக்கையை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ஆ) நீண்ட காலமாக இடமாற்றலாகிச் சென்ற, சேவையை விட்டுச் சென்ற, ஓய்வு பெற்ற மற்றும் தகவல்கள் கண்டறிய முடியாததாகக் குறிப்பிடப்பட்ட ரூபா 148,069 பெறுமதியான கடன் மீதியை அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 செயற்பாட்டு செயற்றிறனின்மைகள்

சபரகமுவ மாகாண, உள்ளூராட்சி ஆணையாளரின் 2005 யூன் 01 ஆந் திகதிய 2005/04 ஆம் இலக்க சுற்றறிக்கையின் (vi) ஆம் பந்தியின் பிரகாரம் கலட்டியாகொட கொஸ்கஹமூல ஹேன காணி கூறிடலின் அடிப்படையில் சபைக்கு உரித்தாக்க வேண்டிய 45 பேர்ச் நில அளவை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. சுற்றறிக்கையின் (iv) ஆம் பந்தியின் பிரகாரம் காணி விற்பனையாளருடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்படாதிருந்ததுடன் காணிப் பதிவாளர் அலுவலகத்திலிருந்து காணி விற்பனைக்குரிய உரித்துறுதி, இலக்கம் மற்றும் பெறுமதி என்பவற்றைப் பெற்று விற்பனையாளரால் வழங்கப்பட்ட தகவல்களின் சரியான தன்மை பரீட்சிக்கப்படவில்லை.

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

வரக்காப்பொல பிரதேச சபைக்குச் சொந்தமாக 85 பொது மயான நிலங்கள் மேவுகை செய்திருந்ததுடன் அந்த மயான நிலங்கள் தொடர்பான மெய்மையாய்வை மேற்கொண்டு கையேற்பதற்கும், அளவீடு செய்வதற்கும், பாதுகாப்பு வேலியை நிர்மாணிக்கும் உரித்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் மற்றும் வருமானம் கிடைக்கின்ற பிரகாரம் வினைத்திறனாக வாடகைக்கு வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6 இழப்பு மற்றும் நட்டம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொருள் மெய்மையாய்வின் பிரகாரம் ரூபா 38,076 பெறுமதியான பொருட்களின் பற்றாக்குறை தொடர்பாக ஏற்பட்ட நட்டத்தை தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அல்கம பொது நூலகத்தில் வருடக் கணக்காக முன்கொண்டுவரப்படுகின்ற நிலுவை புத்தக பட்டியலுக்குரிய நபர்களிடமிருந்து அறவிடுவதற்கோ அல்லது பயன்பாட்டுப் பதிவேட்டிலிருந்து அகற்றுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான தேறிய நிதிஏற்பாட்டில் 46 செலவின விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 7,167,000 ஆன நிதியேற்பாடு 100 சதவீதமும், 52 செலவின விடயங்களின் கூட்டுமொத்தம் ரூபா 9,710,962 தொகையான நிதிஏற்பாடுகளில் 40 சதவீதம் முதல் 98 சதவீதத்திற்கும் இடையிலான கூட்டுமொத்தமாக ரூபா 16,877,962 தொகை சபை நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் கீழே குறிப்பிடப்படுகின்ற கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

| **முறைமைகள்** | **அவதானிப்புக்கள்** |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாக்கப்படாமை |
| | (ii) பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு மீதிகள் தீர்க்கப்படாமை |
| | (iii) வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் குறைவாகவும், அதிகரித்தும் கணக்கு வைக்கப்பட்டமை |
| | (iv) பேரேட்டுக் கணக்குகள் பதிவேடுகளுடன் இணங்காமை |
| (ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு | தேறிய நிதிஏற்பாட்டில் கவனத்தில் கொள்ளக்கூடிய அளவு சேமிக்கப்படாமை. |
| (இ) வருமான நிர்வாகம் | (i) ஆதன வரிக்காக ஆதனங்களின் மதிப்பீடு சரியான பிரகாரம் இடம்பெறாமை. |
| | (ii) நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டண வருமானம் அறவிடப்படாமை |
| | (iii) புதிய நிர்மாணங்களின் அடிப்படையில் ஆதனவரி அறவிடப்படாமை |
| (ஈ) சொத்துக் கட்டுப்பாடும் பாதுகாப்பும் | சபைக்குச் சொந்தமான மயான நிலங்களின் உரித்து மற்றும் பாதுகாப்பு தொடர்பாக நடவடிக்கை எடுக்காமை |